மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.32/2020

2024–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 18–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மரிய டயானா (Dw2) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.18.11.2024</u>

<u>பி.வா.சா.2</u>

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

தற்போது எனது வயது என்ன என்றால் 30 ஆகும். வழக்கு வாதி பிரபாகரன் எனக்கு என்ன உறவு என்றால் தாய்மாமன் ஆவார். 1 வது பிரதிவாதி சாந்தி மரிய கிளாரா எனக்கு என்ன வேண்டுமென்றால் எனது மூத்த தாய்மாமாவின் மனைவி அத்தை முறையாவார். ஞானப்பிரகாசம் எனக்கு என்ன வேண்டுமென்றால் தாத்தா ஆவார். ஞானப்பிரகாசத்தின் வாரிசுகள் பெயர் தெரியுமா என்றால் 1.தாசஸ், 2.பிரபாகரன், 3.ஆரோக்கிய சகாய லதா ஆகியோர் ஆவார்கள். எனது தாயார் பெயர் தான் மேற்படி ஆரோக்கிய சகாய லதா என்றால் சரிதான். தாசஸின் மனைவி தான் 1ம் பிரதிவாதி சாந்தி மரிய கிளாரா என்றால் சரிதான். வழக்கு விபரம் பற்றி எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 380/1F ஆகும். தாவா சொத்தில் வாதி பிரபாகர் குடியிருந்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி பிரபாகரன் சொத்திற்கு பின்பக்கமாக 1ம் பிரதிவாதி சாந்தி மரிய கிளாரா குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பங்கு இருக்கிறதா என்றால் 1 வதாக வாதி பிரபாகரன், 2 வதாக 1ம் பிரதிவாதி சாந்தி மரிய கிளாரா, அதற்கு அடுத்து 3 வதாக உள்ள சொத்து எனது ஆரோக்கிய சகாய லதாக்கு பாத்தியப்பட்டது. இந்த சொத்துக்களை எல்லாம் எனது தாத்தா ஞானப்பிரகாசம் உயிருடன் இருக்கும் போது எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். ஞானப்பிரகாசம் அவரது மனைவி மரிய செல்வராணிக்கு 2011ம் ஆண்டு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணத்தை ரத்து செய்து தான் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 16.11.2011ம் தேதி மீண்டும் ஒரு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

அந்த ரத்து செய்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று மரிய செல்வராணி உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டு உத்தரவு வாங்கியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் நான் 5 வது பிரதிவாதியாக இருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதேபோல் 16.11.2011 ம் தேதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக்கோரி ஞானப்பிரகாசம் வழக்கு போட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரபாகரன், சாந்தி மரிய கிளாரா, எனது தாயார் ஆகியோர்களுக்கு சொத்துக்களை தனித்தனியாக பிரித்து கொடுத்தார் என்றால் சரிதான். எனக்கு பிரித்து கொடுத்த சொத்து எனது அனுபவத்தில் உள்ளதா என்றால் 1ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது. நான் மதுரையில் தான் பிறந்ததலிருந்து குடியிருந்து வருகிறேன். வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.18 09:52:04 +0530